பக்கங்கள்: 05

THEEMPUNAL

# தீம்புனல்

மாலைப் பதிப்பு

wild-forest.org

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:31 | 14.12.2023 வியாழக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053




# 500,000 ரூபா நஷ்டஈடு வழங்க உத்தரவு



தனிநபரின் அடிப்படை உரிமைகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில், பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உட்பட நான்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு தலா 500,000 ரூபா நஷ்டஈடு வழங்குமாறு இலங்கை உயர் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் ஆணைக் குழுவிற்கும் உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2011 ஆம் ஆண்டு மிரிஹான பொலிஸ் நிலையத்தில் தாம் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது பொலிஸ் உத்தியோகத்தர்கள் தம்முடைய அடிப்படை உரிமைகளை மீறியதாக குற்றஞ்சாட்டி டபிள்யூ.ரஞ்சித் சுமங்கல தாக்கல் செய்திருந்த மனுவைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அப்போது தேசபந்து தென்னகோனின் மேற்பார்வையில் இருந்த மிரிஹான பொலிஸ் நிலையத்தில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களும் மனுதாரரை சட்டவிரோதமாக கைது செய்தல், தடுத்து வைத்தல் மற்றும் சித்திரவதைக்கு உட்படுத்தியதன் மூலம் அவரது அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

## இலங்கை கிரிக்கெட்டின் ஆலோசகராக சனத் ஜெயசூர்ய



இலங்கை கிரிக்கெட்டின் ஆலோசகராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சனத் ஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார். அவரது நியமனம் உடனடியாக நடைமுறைக்கு வரும் என இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அண்மையில் இடம்பெற்ற போட்டிகளில் இலங்கை தேசிய அணி மற்றும்19 வயதுக்குட்பட்ட அணிகள் தோல்விகளை சந்தித்ததன் விளைவாக கிரிக்கெட் சபையின் அதிகாரிகள் மற்றும் பயிற்சியாளர்கள் சமீபத்தில் கடுமையான பின்னடைவை எதிர்கொண்டனர்.

ஆசியக்கோப்பையிலும், 2023 உலகக் கோப்பையிலும் இலங்கை அணி தோல்விகளைச் சந்தித்ததன் விளைவாக இலங்கை அணி சாம்பியன்ஸ் டிராபிக்குத் தகுதி பெறும் வாய்ப்பையும் இழந்தது.

இந்நிலையில் சனத் ஜயசூரியவின் நியமனம், இலங்கை கிரிக்கெட் அணியை சரியான பாதையில் வழிநடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஐந்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம்

ஐந்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கடற்றொழிலாளர்கள் அமைப்பின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் கையெழுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை கடற்றொழிலாளர்களின் நிலைப்பாடு எனும் தலைப்பில் சேகரிக்கப்படும் கையெழுத்துக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

வரைவு கடற்றொழில் சட்டத்தை நிராகரிக்கின்றோம், இலங்கை கடற்பரப்பில் வெளிநாட்டு கடற்றொழில் கப்பல்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதை முற்றுமுழுதாக எதிர்க்கின்றோம், கடல் உணவு இறக்குமதியால் உள்ளூர் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதால் கடல் உணவு இறக்குமதியை எதிர்க்கின்றோம், கடற்றொழில் சமூகத்திற்கு 2024 இற்கான பாதீட்டில் போதிய ஒதுக்கீடு இன்மையையும் பொருத்தமற்ற அரச கொள்கைகளையும் மாற்றியமைத்து கடற்றொழில் வாழ்வாதாரங்களை மீளக்கட்டியெழுப்ப வேண்டும் என்று கூறுகின்றோம், கடந்த பல வருடங்களாக இந்திய இழுவைமடி படகுகளால் பாதிக்கப்பட்டு வரும் வட - இலங்கை கடற்றொழில் சமூகங்களுக்கும் நியாயமான தீர்வுகளை முன்னெடுக்குமாறு கூறுகின்றோம் என்பதே ஐந்து அம்ச கோரிக்கையாகும்.

கடந்த பல வருடங்களாக பாரிய பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் - 19 நெருக்கடி கடற்றொழில் சமூகத்தை பெரிதும் பாதித்துள்ளது.

இவ்வாறான துயர் மத்தியில் வாழும் கடற்றொழில் சமூகத்தை மேலும் பாதிக்கும் அரச கொள்கைகளை மாற்றி எமது சமூகத்திற்கு விடிவு வழங்குமாறு கேட்டு இம்மகஜரை கையளிக்கிறோம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# சட்டவிரோதமாக கடலட்டை பிடித்தவர்கள் கைது



சிலாவத்துறை கடற்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது சிலாவத்துறை கடல் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இரவு நீரில் மூழ்கி கடலட்டை பிடித்துக் கொண்டிருந்த நிலையில் 07 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இதன் போது 02 படகுகள், டைவிங் கருவிகள் மற்றும் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட சுமார் 874 கடல் அட்டைகளும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னாரைச் சேர்ந்த 22 வயதுக்கும் 48 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் ஆவர். 07 பேரும் அவர்களின் உடைமைகள் மற்றும் கடல் அட்டைகள் என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சிலாவத்துறை கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# இந்திய மாலுமிக்கு உதவிய இலங்கை கடற்படை



திருகோணமலையில் மருத்துவ காரணங்களுக்காக இந்திய சிப்பாய் ஒருவரை சரியான நேரத்தில் வெளியேற்றுவதற்கு உதவியதற்காக இலங்கை கடற்படை அதிகாரிகள் பாராட்டப்பட்டனர்.

வெளியேற்றப்பட்ட நபர் ஐ.என்.எஸ் சஹ்யாத்ரியின் (எ/ப்49) ஷிவாலிக் கிளாஸ் ஸ்டெல்த் மல்டி-ரோல் போர் கப்பலின் இந்திய கடற்படை மாலுமி என்று இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

"@srilanka_navy இன் சரியான நேரத்தில் மற்றும் விரைவான உதவியானது திருகோணமலையில் உள்ள INS சஹ்யாத்ரியின் @indiannavy மாலுமியை மருத்துவ ரீதியாக வெளியேற்ற உதவியது.

நமது படைகளுக்கிடையே உள்ள நல்லெண்ணம் மற்றும் தோழமை உணர்வின் மற்றொரு எடுத்துக்காட்டு," என்று இந்திய உயர் ஸ்தானிகராலயம் X இல் ஒரு இடுகையின் மூலம் தெரிவித்துள்ளது.

# பொலிஸ் மா அதிபரின் விசேட அறிவிப்பு



பொலிஸ் கணினி குற்றப்பிரிவுக்கு பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் சமூக ஊடகங்களில் இருந்து உருவாகும் மத வெறுப்பு குற்றங்களை விசாரிப்பதற்காக பிரத்தியேகமான பிரிவை உருவாக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதுபோன்ற குற்றங்களை பொதுமக்கள் தொலைபேசி இலக்கம் 0112300637, தொலைநகல் 0112381045 மற்றும் மின்னஞ்சல்: ccid.reliciousSupolice.gov.lk ஆகியவற்றில் முறைப்பாடு செய்யலாம்.

# போதைப் பொருட்களை அழிக்க ஏற்பாடு

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப்பிரிவினரால் கைப்பற்றப்பட்ட 100 கிலோவுக்கும் அதிகமான சட்ட விரோத போதைப்பொருள் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் அழிக்கப்படவுள்ளது.

ஒன்பது சந்தேக நபர்களிடம் இருந்து 107 கிலோ ஹெராயின் மற்றும் 1.104 கிலோ ஹெராயின் என சந்தேகிக்கப்படும் போதைப் பொருட்களை PNB அதிகாரிகள் கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம், சந்தேகநபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, கொழும்பு மேல் நீதிமன்றம் அவர்களுக்கு ஆயுள் தண்டனை விதித்தது.



"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# அத்து மீறும் சமூக வலைத்தளங்கள்

**சமூக ஊடக வலையமைப்புகளில் பிரச்சாரம் செய்யப்படும் மதக் குற்றங்கள் தொடர்பாக அதிகரித்து வரும் கவலைகளுக்கு பதிலளிக்கும் வகையில், அத்தகைய சம்பவங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக பிரத்யேக பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் நேற்று (13) தெரிவித்தனர்.**

**பதில் பொலிஸ் மா அதிபர் (IGP) தேசபந்து தென்னகோன் வழங்கிய பணிப்புரையை பின்பற்றி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஸ்.எஸ்.பி நிஹால் தல்துவா, "சமூக ஊடகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் மதக் குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் பெறுவதற்கும் விசாரணை செய்வதற்கும் விசேட பிரிவை அமைக்குமாறு கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு (CCID)பதில் பொலிஸ்மா அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

**இதன் விளைவாக, மதங்களுக்கு எதிரான இழிவுகள் தொடர்பான புகார்களை நிவர்த்தி செய்ய CCID க்குள் ஒரு தனிப்பிரிவு உருவாக்கப்பட்டது. இத்தகைய குற்றங்களுக்கு கவனம் செலுத்தி திறமையான பதிலை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும்.**

**புகாரளிப்பதை எளிதாக்க, 0112 300 637 என்ற ஹாட்லைனை அழைப்பதன் மூலம் புதிதாக நிறுவப்பட்ட பிரிவுக்கு அறிவிக்குமாறு பொதுமக்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். 0112 381 045 என்ற தொலைநகல் மூலமாகவும் புகார்களை சமர்ப்பிக்கலாம் அல்லது ccid. religious@police.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம் . அணுகலை மேம்படுத்துவதற்கும், இந்தக் குற்றங்களைத் தீர்ப்பதில் சமூக ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்கும் இந்த வழிகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் புகார்களைச் சமர்ப்பிக்கலாம் என்று அதிகாரிகள் வலியுறுத்துகின்றனர், எஸ்.எஸ்.பி.தல்துவா கூறினார்.**

**உலக அளவில் சுமார் 150 கோடிக்கும் அதிகமானோர் சமூக வலைத்தளங்களை பயன்படுத்துகின்றார்கள். இவர்களில் பெரும்பாலானோர் சிறுவர்களும் இளைஞர்களும். சமூக வலைத்தளங்களை இவ்வளவு பேர் பயன்படுத்துவதற்கு முக்கிய காரணம் அது மிக சுதந்திரமாக இருப்பதும் எதை வேண்டுமானாலும் பகிர்ந்துகொள்ள முடியும் என்பதும் ஆகும். உலகமயமாக்கலால் தனித் தனி மனிதர்களாக சுருங்கி போய்விட்ட சமூகத்தை சமூகவலைத்தளங்கள் ஒன்றிணைக்கின்றன.**

**இவ்வலைத்தளங்கள் உருவாக்கப்பட்டமைக்கான உண்மையான காரணம் நபர்களுக்கிடையே சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்துவதும்,வியாபார முன்னேற்றமும் ஆகும். இவ்வாறான தேவைகளுக்காக உருவாக்கப்பட்டவை இன்று மனிதர்களின் மூளையை ஆட்சி செய்து அவர்களது பொழுதுபோக்கு தேவையாக மாற்றம் பெற்றுள்ளது.**

**சமூக வலைத்தளங்களின் பயன்பாடு என்பது இன்று ஒவ்வொருவரினதும் அத்தியாவசிய தேவையாக மாற்றம் பெற்றுள்ளது . நாளொன்றுக்கு ஒருவர் சுமார் 8 மணி நேரத்திற்கும் மேலான நேரத்தை** Face book, Whats'up, Viber, IMO, Skype, Line, Instagram, Twitter, Google, Messenger **போன்ற பல வடிவிலான சமூக வலைத்தளங்கள் உடன் செலவிடுகின்றார்கள்.**

**தனிநபர் மீதான தாக்குதல் நடத்துவதில் சமூக வலைத்தளங்கள் முன்னணி வகிக்கின்றன. போலியான கணக்குகளை உருவாக்கி நல்லவர்களைக் கெட்டவர்களாகவும் கெட்டவர்கள் நல்லவராகவும் சமூக வலைத்தளங்கள் மாற்றுகின்றன. எனவே, அனைத்து விடயங்களிலும் சாதக மற்றும் பாதக விளைவுகள் ஏற்படுவது சகஜம் ஆகும். அதில் சமூக வலைத்தளங்களால் சற்று அதிக பாதகங்கள் ஏற்படுகின்றது இவற்றில் இருந்து விடுபடும் வழிகளை நாமே கண்டறிய வேண்டும்.**

**ஓய்வு நேரங்களையும் பிரயோசனமாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும் சமூக வலைத்தளங்களுக்கு நாம் அடிமையாகி விடாமல் சமூக வலைத்தளங்களை நமக்கு அடிமையாக்கி கொள்ளுதல் வேண்டும்.**

# கல்லறைக்கான இடத்தைத் தேர்வு செய்த போப்



*போப் பிரான்சிஸ் அவருடைய கல்லறையை தேர்வு செய்திருக்கிறார். ஆனால் அது, இதற்கு முன் போப் பதவி வகித்தவர்கள் அடக்கம் செய்யப்பட்ட வத்திக்கான் நகரில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் பசிலிக்கா அல்ல.*

*87 வயதுடைய பிரான்சிஸ், ரோம் நகரில் உள்ள சான்டா மரியா மேகியோர் பசிலிக்காவில் என்னுடைய உடல் அடக்கம் செய்யப்பட வேண்டும் என விரும்புகிறேன் என்று வியாழக்கிழமை (14) வெளியான அவருடைய பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.*

*இதனால், நூற்றாண்டுகளுக்குப்பின் வத்திக்கான் நகருக்கு வெளியே அடக்கம் செய்யப்படும் முதல் போப் ஆகிறார். கடந்த 1903 ஆம் ஆண்டு செயின்ட் பீட்டர்ஸ் தவிர்த்து வேறிடத்தில் அடக்கம் செய்யப்பட்டவர் போப் லியோ 8 ஆவார். அவருடைய உடல் ரோமில் உள்ள செயின்ட் ஜான் பசிலிக்காவில் அடக்கம் செய்யப்பட்டது.*

*போப் ஆவதற்கு முன்பு, ரோம் நகருக்கு பிரான்சிஸ் செல்லும்போது, ஒரு ஞாயிற்றுக்கிழமை தினத்தில் சான்டா மரியா மேகியோர் பசிலிக்காவுக்கு செல்வது வழக்கம்.*

*2013 ஆம் ஆண்டு போப்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும், அறுவைச் சிகிச்சை செய்த பின்பும் அவர் ரோமிற்கு சென்று பசிலிக்காவில் வழிபட்டிருக்கிறார்.*

*இதற்கு முன் வாடிகனில் உள்ள பசிலிக்காவில் 7 போப்புகள் அடக்கம் செய்யப்பட்டு இருக்கின்றனர் என வாடிகனின் அதிகாரபூர்வ ஊடகத் தகவல் தெரிவிக்கின்றது.*

# மீண்டும் பரவும் கொரோனா வைரஸ்



*கொரோனா வைரஸ் பாதிப்பு முழுமையாக நீங்கி மக்கள் நிம்மதியாக இருக்கும் நிலையில் திடீரென மீண்டும் கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்படுவதாக சிங்கப்பூர் அரசு தனது நாட்டு மக்களை எச்சரித்துள்ளது.*

*எனவே, முகக்கவசம் அணிதல், கொரோனா தடுப்பூசி செலுத்துதல் ஆகியவற்றை தீவிரப்படுத்த வேண்டும் என சிங்கப்பூர் சுகாதார அமைச்சகம் கூறியுள்ளது.*

*சிங்கப்பூரில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 32 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டதாகவும் அங்குள்ள மருத்துவமனைகளில் கூட்டம் நிரம்பி வருவதாகவும் கூறப்படுகிறது.*

*சிங்கப்பூர் நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் தேவைப்பட்டால் உதவ தயாராக இருப்பதாகவும் உலக சுகாதார மையம் தெரிவித்துள்ளது.*

# விஜயகாந்தின் மனைவி பொதுச் செயலாளரானார்

*இந்திய பாராளுமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில் தமிழக அரசியல் கட்சிகள் தேர்தலுக்கு தயாராகி வருகின்றன.*



*தே.மு.தி.கவும் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகி வருகிறது. இந்நிலையில் சமீபத்தில் தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது தொண்டர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது.*

*தே.மு.தி.க பொதுக் குழுக்கூட்டம் இன்று தொடங்கியபோது விஜயகாந்த் நீண்ட காலம் கழித்து தொண்டர்கள் முன் தோன்றினார். நடைபெற்று வரும் பொதுக்குழுக் கூட்டத்தில் தே.மு.தி.க கட்சியின் பொதுசெயலாளராக பிரேமலதா விஜயகாந்த் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.*

*எனினும் பாராளுமன்ற தேர்தல் கூட்டணி, இதர விவகாரங்கள் குறித்து விஜயகாந்த் முடிவுகளை மேற்கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த பொது செயலாளர், மாற்றத்தால் கட்சியில் எவ்விதமான மாற்றங்கள், வளர்ச்சிகள் ஏற்படும் என தே.மு.தி.க தொண்டர்கள் காத்திருக்கின்றனர்.*

## வெளிநாடு செல்லும் இலங்கையர்களுக்கு விசேட அறிவிப்பு

வெளிநாடு செல்லும் இலங்கையர்களுக்கு விசேட அறிவிப்பு ஒன்று விடுக்கப் பட்டுள்ளது. அதற்கமைய, ஒருவர் வெளிநாட்டிற்கு செல்வதாக இருந்தால்,



சரியான உடல்நிலையில் உள்ளீர்களா? என்பதைச் சரிபார்க்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட் டுள்ளது. கொழும்பில் நேற்று இடம்பெற்ற மாநாட் டில் கலந்து கொண்ட விசேட வைத்தியர் காந்தி ஆரிய ரத்ன என்பவரால் இக்கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. வெளிநாடுக ளுக்கு செல்வோர் தொற்றக் கூடிய மற்றும் தொற்றாத நோய்கள் தொடர்பில் அவ தானம் செலுத்துமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## சிறுமியைத் தொந்தரவு செய்தவர் கைது

சவூதி அரேபியாவின் ரியாத்தில் இருந்து கட்டு நாயக்க விமான நிலையத் திற்கு வந்து கொண்டிருந்த விமானத்தில் பயணித்த இலங்கைச் சிறுமி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகியுள்ளார். அதன் படி சம்பவத்துடன் தொடர் புடைய இந்திய விமானப் பயணியை விமான ஊழி யர்கள் கைது செய்து கட் டுநாயக்க விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைத் துள்ளனர்.

நேற்று (13) காலை 07.20 மணியளவில் சவூதி அரேபியாவின் ரியாத்தில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்த டைந்த விமானத்திலேயே இந்தப் பாலியல் வன்கொ டுமை இடம்பெற்றுள்ளதா கத் தெரிவிக்கப்படுகின்றது.

## 6 தமிழக மீனவர்கள் கைது

காரைநகர் கடற்பரப்பில் கடற்படையினர் நேற்று (13) மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது இலங்கை கடற்பரப் பில் அத்துமீறி மீன்பிடித்த 6 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் பயன்படுத்திய படகும் கைப்பற்றப்பட் டுள்ளது. கைது செய்யப் பட்ட மீனவர்களை மயி லிட்டி துறைமுகத்தில் கடற்றொழில் நீரியல் வளத் துறை திணைக்கள அதிகா ரிகளிடம் ஒப்படைக்க கடற்படையினர் நடவ டிக்கை எடுத்துள்ளனர்.

## ஆயிரம் ரூபாவை எட்டிய பச்சை மிளகாயின் விலை

நாடு முழுவதும் உள்ள வர்த்தக நிலையங்களில், மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளன. போஞ்சி, கரட், லீக்ஸ், மற்றும் முள் ளங்கி போன்ற மரக்கறிகள் கிலோ ஒன்று 400 ரூபாய் வரை அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு கிலோக்கிராம் தக் காளி 500 ரூபாவாகவும் ஒரு கிலோக்கிராம் பச்சை மிள காய் ஆயிரம் ரூபாவாக வும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, விசேட பொருளாதார மையங்களி லும், கொழும்பு மரக்கறி சந்தையிலும் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளது.

விவசாயிகளிடம் கொள் வனவு செய்யப்படுகின்ற விலையைவிட அதிகரித்த விலையிலேயே மரக்கறி கள் விற்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## இரத்தினக்கல் ஏற்றுமதி அதிகரிப்பு



இரத்தினக்கல் ஏற்றும தியில் வெற்றிகரமான வளர்ச்சி காணப்படுவதாக தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருட இரத்தினக்கல் ஏற்றுமதி வருமானம் 16.05 வீதத் தால் அதிகரித்துள்ளதாக அதன் ஏற்றுமதி சேவை கள் மற்றும் ஏற்றுமதி சந் தைப்படுத்தல் திணைக்க ளத்தின் பணிப்பாளர் அமல் தென்னகோன் தெரிவித்தி ருந்தார். ஏற்றுமதி வருமா னத்தை மேலும் அதிகரிப் பதற்கான கலந்துரையாடல் கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக அவர் மேலும் குறிப் பிட்டுள்ளார்.

## தொலைபேசி விலைகள் அதிகரிக்கும் சாத்தியம்

பாராளுமன்றத்தில் பெறு மதி சேர் வரி அல்லது வட் நிறைவேற்றப்பட்டதன் மூலம், ஜனவரி மாதம் முதல் தொலைபேசிகளின் விலை வேகமாக உயரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 18% வரி சேர்க்கப்படும் போது, அதற்கேற்ப தொலை பேசிகளின் விலையும் உய ரும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. குறிப்பாக, கொவிட் காலம் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, இறக்குமதி கட்டுப்பாடுகள் காரண மாக தொலைபேசிகளின் விலை கடுமையாக அதிக ரித்துள்ளது. அடுத்த ஆண்டு முதல் விலை மேலும் அதிகரிக்கலாம் என தொலைபேசி நிறுவ னங்கள் தெரிவிக்கின் றன.

## இன்று விண்கல் மழை

இன்று (14) நள்ளிரவு விண்கல் மழையை அவதா னிக்க முடியும் என ஆர்தர் சி கிளார்க் மையம் அறிவித் துள்ளது. பைதான் 3200 சிறு கோளில் இருந்து கழிவுகள் பூமியை கடந்து செல்வ தால் இது நிகழ்கிறது என்று கூறப்படுகிறது. பைதான் 3200 சிறுகோளின் கழிவு கள் பூமியின் வளிமண்ட லத்தில் மோதிய பிறகு இந்த விண்கல் மழையை அவதானிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பில் சிறுவர் பாதுகாப்பு மாநாடு

பாடசாலை மட்டத்தில் சிறுவர் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி பிள்ளை நேய சூழலை உருவாக்கும் விதத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை யின் தேசிய நிகழ்ச்சித் திட் டத்தின் கீழ் மாணவர் தூது வர் நிகழ்ச்சி திட்டம் முன் னெடுக்கப்பட்டு வருகின் றது. அதன் ஒரு கட்டமாக பாடசாலையின் சிரேஷ்ட மாணவத் தலைவர்கள் மற் றும் பொறுப்பாசிரியர் களை உள்ளடங்கிய சிறு வர் பாதுகாப்பு மாநாடு நேற்று (13) புதன்கிழமை மாவட்ட செயலகத்தின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் ஏற் பாடு செய்யப்பட்டு இடம் பெற்றது. இந்நிகழ்வில் சகல கல்வி வலயங்களை யும் உள்ளடக்கிய மாணவ தூதுவர் நிகழ்ச்சித் திட்டத் தின் கீழ் பதிவு செய்யப் பட்ட பாடசாலைகளின் சிரேஷ்ட மாணவர்கள் மற்றும் பொறுப்பாசிரி யர்கள் பங்குபற்றினர்.









# அசைக்க முடியாத இடத்தில் சூர்யகுமார்

ஐ.சி.சி ரி20 தரவரிசையில் இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் சூர்யகுமார் யாதவ் வளர்ந்து வரும் இளம்வீரர் ரிங்கு சிங் ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைப் பெற்றுள்ளனர்.

இந்தியா, தென்னாபிரிக்கா ஆகியவற்றுக்கு இடையேயான முதல் ரி20 போட்டி மழையால் ரத்தான நிலையில், 2ஆவது போட்டியில் சூர்யகுமார் யாதவ் அரைசதம் விளாசினார். இதன்மூலம் ஏற்கெனவே ரி20 பேட்டிங் தரவரிசையில் நம்பர் 1 இடத்தில் உள்ள சூர்யகுமார் யாதவ் கூடுதலாக 19 புள்ளிகளைப் பெற்று, 865 ரேட்டிங் புள்ளிகளை கொண்டுள்ளார். இதன் மூலம், தனக்கு அடுத்த இடத்தில் உள்ள பாகிஸ்தானின் முகமது ரிஸ்வானைவிட 88 புள்ளிகள் முன்னிலையுடன், யாரும் அசைக்க முடியாத வகையில் வலுவாக முதலிடத்தை தக்க வைத்துள்ளார். தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது ரி20 கிரிக்கெட் போட்டியில் 68 ஓட்டங்கள் எடுத்ததன் மூலம், தனது முதல் சர்வதேச ரி20 அரைசதத்தை ரிங்கு சிங் பதிவு செய்தார். மேலும், இதன் மூலம் 46 இடங்கள் முன்னேறி, முதல் முறையாக டாப் 100 இடங்களுக்குள் வந்துள்ளார்.

தற்போது 464 ரேட்டிங் புள்ளிகளுடன் அவர் 59 ஆவது இடத்தில் உள்ளார். இதற்கிடையே பேட்டிங்கில் டாப் 10 இடங்களுக்குள் ருதுராஜ் கெய்க்வாட் ஏழாவது இடத்தில் உள்ளார்.மேலும் பந்துவீச்சு தரவரிசையில் இந்தியாவின் ரவி பிஷ்னோய் முதலிடத்தில் நீடிப்பதோடு, ஆல்ரவுண்டர்கள் தரவரிசையில், காயத்தால் ஓய்வில் உள்ள ஹர்திக் பாண்டியா நான்காவது இடத்தில் உள்ளார்.




# கவுண்டி கிரிக்கெட்டில் சேட்டேஷ்வர் புஜாரா

தென்னாபிரிக்காவில் நடக்க உள்ள இந்தியாவின் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் புறக்கணிக்கப்பட்ட மூத்த பேட்டர் சேட்டேஷ்வர் புஜாரா மீண்டும் 2024 கவுண்டி சீசனுக்காக இங்கிலாந்து கவுண்டி கிரிக்கெட் கிளப் சசெக்ஸூடன் ஒப்பந்தம் செய்துள்ளார்.

2022 இல் முதன் முதலில் கையெழுத்திட்டதன் மூலம், அந்த கிளப்புடன் அவர் மூன்றாவது சீசனில் வரும் ஆண்டில் களமிறங்க உள்ளார். 2024 சீசனைப் பொறுத்தவரை, கவுண்டி சாம்பியன்ஷிப்பின் தொடக்க ஏழு ஆட்டங்களுக்கு அவர் இருப்பார்.

புஜாரா 18 கவுண்டி சாம்பியன்ஷிப் ஆட்டங்களில் 64.24 சராசரியில் 1,863 ரன்கள் எடுத்தார். இதில் எட்டு சதங்கள் மற்றும் மூன்று அரை சதங்கள் அடங்கும்.

அவரது முதல் சீசனில் டெர்பிஷைருக்கு எதிராக 231 ரன்கள் எடுத்ததே சசெக்ஸிற்கான அவரது சிறந்த ஆட்டமாகும்.



# சவூதியில் கிளப் உலகக்கிண்ணப் போட்டி

சவூதி அரேபியாவின் ஜெட்டா நகரில் டிசம்பர் 12 முதல் 22 வரை கிளப் உலகக் கோப்பை நடைபெறவுள்ளது. பிரேஸிலில் இருந்து ஃப்ளூமினென்ஸ் மற்றும் இங்கிலாந்தின் மான்செஸ்டர் சிட்டி ஆகியவை போட்டியாளர்களாக உள்ளன, மேலும் ரியல் மாட்ரிட்டை உலகின் சிறந்த அணியாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

பீபிஃபா கிளப் உலகக் கோப்பை 2023 சவூதி அரேபியாவின் செங்கடலின் கரையில் உள்ள ஜெட்டாவில் இந்த செவ்வாய்க்கிழமை தொடங்குகிறது. உலகின் தலைசிறந்த 7 அணிகளை ஒன்றிணைக்கும் இருபதாவது மற்றும் இறுதிப் போட்டியாக இது இருக்கும். அமெரிக்காவில் பீபா கிளப் போட்டியில் 32 அணிகள் போட்டியிடும், இது தேசிய அணிகளுக்கான பீபா உலகக் கோப்பையைப் போலவே இருக்கும்.

ஃப்ளூமினென்ஸ் மற்றும் மான்செஸ்டர் சிட்டி ஆகியவை அவற்றின் வரலாறு மற்றும் தற்போதைய வடிவத்தின் அடிப்படையில் தலைப்புக்கு மிகவும் பிடித்தவையாகத் தொடங்குகின்றன. ஒரு மாதத்திற்கு முன்பு கோபா லிபர்டடோர்ஸ் இறுதிப் போட்டியில் போகாவை 2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து பிரேஸிலியர்கள் தங்கள் இடத்தைப் பெற்றனர். கரியோ காஸ் பட்டத்தை உறுதி செய்தால், கொரிந்தியன்ஸ் மற்றும் இன்டர் மற்றும் சாவ் பாலோ பட்டங்களைத் தொடர்ந்து, சாம்பியன் பட்டம் வென்ற நான்காவது பிரேஸிலிய அணியாக மாறும்.







## அர்ஜீனா விருதுக்கு மொஹமட்

# ஷமி பரிந்துரை

ஒருநாள் உலகக்கோப்பை 2023 தொடரில் மிகவும் சிறப்பாக செயல்பட்டு அனைவரையும் கவர்ந்த இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி இந்த ஆண்டு அர்ஜுனா விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார். மத்திய அரசு வட்டார ஆதாரங்களின்படி, நாட்டின் இரண்டாவது மிக உயர்ந்த விளையாட்டு விருதான அர்ஜுனா விருது பட்டியலில் ஷமி இடம் பெறாத நிலையில், அவரது பெயரை சேர்க்க விளையாட்டு அமைச்சகத்திடம் பி.சி.சி.ஐ சிறப்பு கோரிக்கை விடுத்ததாகக் கூறப்படுகிறது.

அதேநேரத்தில் ஆடவர் இரட்டையர் பேட்மிண்டன் ஜோடியான சாத்விக் சாய்ராஜ் ராங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி ஆகியோர் மேஜர் தியான் சந்த்கேல் ரத்னா விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 14.12.2023 அன்று வெளியிடப்பட்டது.